**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின ("அதிகாரசபை") 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது். எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பென்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் அதிகாசைபை தொடர்ந்நியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
நிறுவனத்தின நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாக தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காள்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்ானிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவனம் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 25 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியணியினருக்கு வழங்கப்படுகின்ற கடன் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் பதவியணியினர்களுக்கு வழங்கிய மற்றும் அறவிட்ட கடன் பணத்தின் தேறிய விளைவான ரூபா 13.06 மில்லியன் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் ஊழியர்களுக்கு கடன் வழங்குதல் / அறவீடு செய்தல் நிறுவனத்தின் எதிர்கால சேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வளங்களுக்காக செய்யப்படும் ஒரு முதலீடு அல்ல. அது முதலீடுகளுக்குப் புறம்பாக செயற்பாட்டு சுற்றுவட்டத்தினுள் இடம்பெறுவதால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | இலங்கை பொதுதுறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இற்கு இணங்கியிருத்தல் வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையின் ரூபா 503.5 மில்லியன் கிரயமான 134 வாகனங்கள், ரூபா 50.4 மில்லியன் கிரயமான 94 கட்டிடங்கள், மற்றும் ரூபா 111.5 மில்லியன் கிரயமான பெரிபோட் மற்றும் கொள்கலன் என்பன 2021 சனவரி 01 ஆந் திகதியளவில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அச்சொத்துக்கள் இன்னும் அதிகார சபையினால் பயன்படுத்துகின்ற போதிலும் பொதுத்துறை கணக்கீட்டு | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் சம்பந்தமாக அவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதிக்காக உரிய செம்மையாக்கல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. முழுமையான பெறுமானத் தேய்வு செய்தலுக்கு உட்பட்டுள்ள கட்டிடங்களின் எண்ணிக்கை 95 ஆகும். | நியமத்தின் பிரகாரம் வருடாந்த சொத்து பயனுள்ள ஆயுட் காலத்தினை மீளாய்வு செய்து பெறுமானத் தேய்விற்காக ஒதுக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் அச்சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்காததுடன் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் அச்சொத்துக்களின் வினைத்திறன் ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டுத் தவறினை சரிசெய்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது இக்கட்டிட வகுப்பானது மதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாக மதிப்பீடு செய்யும் நடவடிக்கை இடம்பெற்றுவருகின்றது. | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தாக இனங்காணப்பட்டதன் பின்னர் ஆதனம், பொறி, உபகரண விடயத்தின் நியாயப் பெறுமதியை நம்பகத்தன்மையாக அளவீடு செய்யக்கூடியதாக இருக்கையில் நியாயப் பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை அதிகார சபை பயன்படுத்தி வந்த 271 மோட்டார் வாகனங்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 271 வாகனங்களுக்கான மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய கணக்கீட்டு நடைமுறை மேற்கொள்ளப்படும். | நியமத்தின் பிரகாரம் வாகனங்களின் நியாயப் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 43 ஆம் மற்றும் 51 அம் பந்திகளின் பிரகாரம் ஆதன விடயத்தின் நியாயப் பெறுமதியை வழக்கமாக சந்தைகளை அடிப்படையாகக் கொண்ட சான்றுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் சொத்துக்கள் வகுப்பினை மீள்மதிப்புச் செய்தல் வேண்டும். அதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் உரிய தொழில்சார் தகமையுள்ள மதிப்பீட்டாளரினால் நடைமுறைச் சந்தைவிலை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இல்லாது அதிகார சபையின் 1,689 வாகனங்களின் பெறுமதியானது கிரயத்தினையும் காப்புறுதி நிறுவனத்தினால் காப்புறுதி செய்த பெறுமதியையும் அடிப்படையாகக் கொண்டு ரூபா 7,108.9 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வாகனங்கள் சம்பந்தமாக காப்புறுதியினைப் பெற்றுக்கொள்வதற்குச் செல்லும் போது அந்த வாகனங்கள் தொடர்பான முறையான மதிப்பீட்டுப் பெறுமதியைத் தீர்மானித்து காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்த தொழில்சார் மதிப்பீடானது பட்டயப் பொறியியலாளர்களை உள்ளடக்கிய அதிகார சபையின் ஒரு குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. | நியமத்தின் பிரகாரம் தகமைபெற்ற மதிப்பீட்டாளரினால் வாகனங்கள் நடைமுறைச் சந்தை விலைகளின் பிரகாரம் நியாயப் பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 58 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பிரதான பாகங்களின் வினைத்திறன் ஆயுட் காலம் ஒன்றுக்கொன்று மாற்றமான பெறுமானத் தேய்வு விகிதத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அதிகார சபையின் முழுச் சொத்துக்களில் 63 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒன்றுக்கொன்று வித்தியாசமான ஆயுட்காலத்தைக் கொண்ட அதிவேகப் பாதைகளின் வீதி மேற்பரப்பு சமிக்ஞைகள் என்பவைகளை உள்ளடக்கிய பல்வேறு பாகங்களுக்காக தொழில்சார் மதிப்பீட்டின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு விகித்தினை தீர்மானிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ஒரே பெறுமானத் தேய்வு விகிதத்தின் கீழ் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க அச்சொத்துக்களின் உண்மையான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | இலங்கை வீதிச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் முறைமையின் மூலம் இதற்காக முறைப்படியாக அணுகுவதற்காக சொத்துக்களின் மதிப்பீட்டு முறைமை டொடியூலினை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையானது தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | அதிவேகப் பாதைகளின் ஒவ்வொரு பகுதியும் நியமத்தின் பிரகாரம் பொருத்தமான விகிதத்தின் கீழ் பெறுமானத் தேய்வு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பந்தி இலக்கம் 51 இன் பிரகாரம் சொத்துக்களின் மீள்மதிப்பின் போது சொத்துக்கள் வகுப்பு மீள் மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக அதிகார சபையின் 632 கட்டிடங்களில் 262 கட்டிடங்கள் மாத்திரம் 2022 ஆம் ஆண்டின் இறுதிவரை மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தன | அதிகார சபையின் கட்டிட வகுப்பினையே மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யும் நடவடிக்கை தற்பொழுதும் இடம்பெற்று வருகின்றது. | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்புச் செய்கையில் முழுச்சொத்து வகுதியினையும் மீள்மதிப்புச் செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 13 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்களாக இனங்காணப்பட வேண்டிய ரூபா 40 மில்லியன் ஆன பொரல்லை சுரங்க வழியினுள் அமைந்துள்ள 20 கடைகளும் 02 | பொரல்லை சுரங்க நடைபாதையில் காணப்பட்ட கடைகள் தொடர்பாக முதலீட்டுச் சொத்தாக காட்டுவது தொடர்பான இணக்கப்பாடு எதிர்காலத்தில் எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்கள் சரியாக இனங்காணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | துணைக் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகளின் பெறுமதியும் முதலீட்டுச் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 14 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்புபட்ட தரப்பினர்கள் பற்றிய விபரமும் தொடர்புபட்ட தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 14 இன் 16 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்புபட்ட தரப்பினர்களை வெளிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் தொடர்புபட்ட தரப்பினர்களும் அவர்களுடனான கொடுக்கல் வாங்கல்களும் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஐ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 30 ஆம் பந்தியின் பிரகாரம் வேலைகளைப் பூர்த்திசெய்யும் கட்டத்தின் அடிப்படையில் (Stage of Completion) சேவை வழங்குனர் ஒப்பந்த வருமானம் இனங்காணப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக அதிகார சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 107.28 மில்லியன் தொகையான முழுமையாக முடிவடைந்த வேலைகளின் அடிப்படையில் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பந்தி இலக்கம் 33 இற்கு இணங்க கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றகாலப்பகுதிக்காக சேவை நாடுனர் வேலையை பூர்த்திசெய்த அளவிற்கு இணங்க வருமானத்தை இனங்காணல் மேற்கொள்ளப்படும். | நியமத்தின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்படும் கட்டத்தின் அடிப்படையில் வருமானங்களை இனங்கண்டு வருமானங்களும் செலவுகளும் நியாயமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஒ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் 141 (கா) பந்தியின் பிரகாரம் ஊழியர் பிரதிபலன்களை கணக்கீடு செய்யும் போது அறிக்கையிடும் திகதியில் பயன்படுத்திய பிரதான காப்பீட்டு கருதுகோளின் அடிப்படையில் கழிவு விகிதம் தீர்மானிக்கப்பட்டது. எதிர்பார்த்த விகிதத்தினை உள்ளடக்கி கருதுகோள்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் அவ்வாறான எந்த வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் ஊழியர் பிரதிபலன்களை கணிப்பீடு செய்யும் போது ஈடுபடுத்தப்படுகின்ற கருதுகோள்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துபவர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் மற்றும் அது நியாயமானது என்பதனை தெளிவுபடுத்துவதற்காக உரிய தகவல்கள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிரந்தர விடயப்பரப்பிற்குப் புறம்பாக உள்நாட்டு வங்கிகளின் மூலம் நிதிகளை வழங்கி கிராமிய வீதிச் செயற்திட்ட அலகின் மூலம் தேசிய பிராந்திய மற்றும் கிராமிய ரீதியாக 100,000 கிலோமீற்றர் மாற்று வீதிகளைப் புனரமைக்கும் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரைவாசியாகப் பூர்த்தி செய்யப்பட்ட தேசிய பெருந்தெருக்களுக்குரியதல்லாத வீதிகளுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 125,586 மில்லியன் நடைமுறை வேலையாக (WIP) இனங்காணப்பட்டிருந்தது. இந்த நிர்மானத்தை முழுமையாக பூர்த்திசெய்ததன் பின்னர் செலவாக பதிவழிக்கப்படுகின்றது எனவும் இச்செலவுகளின் காரணமாக அதிகார சபையின் மிகைகளுக்கு அல்லது பற்றாக்குறைக்கான தாக்கம் செயற்திட்டத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை மீளச் செலுத்துவதற்காக பொதுத்திறைசேரியிடமிருந்து மானியத்தைப் பெற்று பின்னர் எதிரீடு செய்யப்படுகின்றது எனவும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க வருமானத்தை இனங்காணல் மற்றும் செலவுகளாகப் பதிவழிக்கும் இரண்டு காலப்பகுதிக்குள் இனங்காணலானது கருதுகோளுக்கு முரணானது என அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த மூலதனச் செலவுகளானது சொத்துக்களின் பொறுப்பாண்மையினை வகிக்கும் நிறுவனங்களுக்கு மாற்றப்படாமையினால் அரசாங்கத்தின் கணக்குகளில் மூலதனச் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தும் அதிகார சபையினால் மீண்டுவரும் செலவாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது. | 100,000 கிலோமீற்றர் மாற்று வீதிகளை புனரமைக்கும் செயற்திட்டம் தொடர்பான கணக்கீட்டு நடைமுறையானது கணக்கீட்டு கொள்கையின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வருமானங்கள் மற்றும் செலவுகள் உரிய காலப்பகுதிக்கு செம்மையாக்கப்படும். | மூலதனச் செலவுகள் உரியவாறு சொத்துக்களின் பொறுப்பாண்மையை வகிக்கும் பிரதேச சபைகள் நகர சபைகள் முதலியவற்றிற்கு மாற்றப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) அதிகார சபையின் A மற்றும் B தரங்களுக்குரிய பெருந்தெருக்களுக்குரிய மொத்த துாரத்தின் அளவு 12,225 கிலோ மீற்றர்களாக இருந்த போதிலும் தேசிய பெருந்தெருக்களை மூலதனமாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வைர 285 வீதிகளின் 3,267 கிலோ மீற்றர்கள் மாத்திரம் | வீதிகளை மூலதனமாக்குவதற்கான உத்தேச செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் போக்குவரத்து தொடர்புகள் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் | பல்வேறு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு செயற்திட்டங்களின் மூலம் நிதியளித்து நிர்மாணிக்கப்படுகின்ற மற்றும் அடிக்கடி புனரமைப்புச் செய்யப்படுகின்ற பெருந்தெருக்களை |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க வீதி அபிவிருத்தி அதிகார சபையின் A மற்றும் B தரங்களுக்குரிய 8958 கிலோ மீற்றர் தூரங்களுக்கான பெறுமதி நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருக்காததுடன் இது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த வீதி முறைமையின் தூரத்தில் 73 சதவீதமாகும். | (TCAMP) கீழ் தற்பொழுது காணப்படுகின்ற மற்றும் உத்தேச நடைமுறைகள் இனங்காணப்பட்டுள்ளன. | மூலதனமாக்கி பொருத்தமான வகையில் பெறுமானத் தேய்வு செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை இனங்கண்டு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அதிகாரச பையினால் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது இடம்பெயர்நதவர்களை மீண்டும் குடியமர்த்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட 07 ஏக்கர் காணி, பல்வேறு சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி தகவல் முறைமை, 25 மோட்டார் சைக்கிள்கள் 22 வாகனங்கள் என்பன நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக அதிகார சபையின் சொத்துக்கள் ரூபா 263.35 மில்லியனால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இக்காணிகள் சம்பந்தமான தகவல்கள் கோரப்பட்டுள்ளதுடன் அத்தகவல்கள் கிடைத்ததன் பின்னர் உரிய செம்மையாக்கல் மேற்கொள்ளப்படும். | அதிகார சபையின் அனைத்து சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 08 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 34,044.46 கிரயமான நிலையான சொத்துக்கள் மீள்மதிப்புச் செய்து அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காமையின் காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதி குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 06 செயற்திட்டங்களின் சொத்துக்கள் முறையான பொறிமுறையினூடாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளது. | செயற்திட்டங்களின் மூலம் அதிகாரச சபைக்கு ஒப்படைக்கப்பட்ட வாகனங்கள் கணனிகள், தளபாடங்கள் முதலிய அனைத்து சொத்துக்களும் அதிகார சபையினால் கணக்கீடு செய்யப்பட்டு வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் மகனெகும இமல்சன் கம்பனியின் 99 சதவீதாமான நேரடியாக கட்டுப்படுத்தும் உரிமை அதிகார சபையிடம் உள்ளது என வெளிப்படுத்தப்பட்டிருந்தும் அதற்கான பங்குச் சான்றிதழ் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படாததுடன் கம்பனியின் பணிப்பாளர் சபைக்குள் சமமான பிரதிநிதித்துவம் அதிகார சபைக்கு | உரிய கம்பனியின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களை நியமிப்பது அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் மூலமாகும். பங்குச் சான்றிதழ்களை பல தடவைகள் வேண்டிக்கொள்ளப்பட்டிரு | உரிய பங்குச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் உரிமையாண்மையினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பணிப்பாளர் சபையை |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் 2004 ஆம் ஆண்டின் போது உரிய கம்பனியில் ரூபா 01 மில்லியன் முதலீடு மேற்கொள்ளப்பட்டது என அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தும் உரிய கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் அது கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ந்தும் இதுவரை அச்சான்றிதழ் அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | நியமிப்பதற்கும் கம்பனியை கலைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதனால் அதற்கு முன்னர் உரிமையாண்மை தொடர்பான சிக்கலை தீர்த்துவைப்பதற்காக அதிகார சபையினால் தேவைவலயான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | வரிசை அமைச்சின் உரிய செலவு வவிடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு தேவைக்கேற்றவாறு பொதுத்திறைசேரியிடமிருந்து கிடைக்காமையின் காரணமாக 2022 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் வரிசை அமைச்சின் செயலாளரின் வேண்டுதலின் பிரகாரம் அதிகார சபையினால் பெருந்தெருக்கள் அமைச்சிற்கு 2021 மற்றும் மீளாய்வாண்டின் போது முறையே ரூபா 494.2 மில்லியன் மற்றும் ரூபா 1,470 மில்லியனாக மொத்தமாக ரூபா 1,964.2 மில்லியன் பணம் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய பணம் பொதுத்திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் பணமாக அதிகார சபையின் கணக்குகளில் காட்டுமாறு வரிசை அமைச்சின் செயலாளரினால் 2022 ஆகஸ்ட் 05 ஆந் திகதி ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அதிகார சபையினால் உரிய பணம் திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முகாமைத்துவ பிரிவிற்கு வழங்கிய பணம் கணக்கீடு செய்யப்பட வேண்டிய முறைமையானது வரிசை அமைச்சு செயலாளரினால் நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரிடமிருந்தும் மற்றும் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்தும் ஆலோசனை வேண்டப்பட்டிருந்தும் உரிய ஆலோசனை இதுவரை கிடைத்திருக்கவில்லை. | வரிசை அமைச்சிற்கு கடனை வழங்குவதற்கு பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஊ) | வீதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மேற்கொள்ளும் போது சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக 38(அ) வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து இழப்பீட்டுப் பணத்திற்குரிய முதலாவது இழப்பீட்டுக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி வரை 07 சதவீத வருடாந்த வட்டி உரிய இழப்பீட்டுதாரருக்கு செலுத்தப்படுதல் வேண்டும். அதற்கிணங்க மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியுள்ள மொத்த நியதிச்சட்ட இழப்பீட்டுப் பணம் மற்றும் அது தொடர்பான வட்டித் தொகை அதிகார சபையினால் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய இழப்பீடு மற்றும் வட்டிப் பணத்தை கொடுப்பனவு செய்வதற்காக அந்த அந்த பிரதேச செயலகத்தினால் நிதி எற்பாடு வேண்டிக்கொள்ளப்பட்ட காணித் துண்டுகள் தொடர்பாக மாத்திரம் காணி அமைச்சில் வவுச்சர் தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்து கணக்கீடு செய்யப்படும். | செலுத்த வேண்டிய நியதிச்சட்ட இழப்பீட்டுப் பணமும் அது தொடர்பான வட்டியும் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பல்வேறு செயற்திட்டங்களின் மூலம் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 33,770 மில்லியன் கிரயமான 2,099.41 ஹெக்டெயர் காணியாக தனியாக இனங்காணப்படாத ஆதனம் பொறி மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வுச் செலவினை செம்மையாக்கும் போது காணிகளின் பெறுமதியை உள்ளடக்கும் ஆபத்தும் காணப்பட்டது. | இது சம்பந்தமான விடயங்களை நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் கொள்கை குறிப்பு இலக்கம் 2.3 (iii) இல் இக்காணியின் பெறுமதி பிரித்து தனியாக காட்டப்பட்டுள்ளதுடன் பெறுமானத் தேய்வு செய்தல் மேற்கொள்ளப்படவில்லை எனவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | காணிக்காக பெறுமானத் தேய்வு செய்தல் மேற்கொள்ளப்படவில்லை என உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஏ) | அதிகார சபையினால் நேரடியாக காணிகளைப் பொறுப்பேற்றல் தொடர்பாக கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 105 வவுச்சர்கள் இரட்டை கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட செலுத்த வேண்டிய இழப்பீடு மற்றும் வட்டிப் பெறுமதி ரூபா 34.42 மில்லியனால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2022-12-31 ஆந் திகதியில் செலுத்த வேண்டிய இழப்பீடு மற்றும் வட்டிப் பெறுமதியினைக் கணிப்பீடு செய்யும் போது கணனித் தவறினால் 105 வவுச்சர்கள் இரட்டைக் கணிப்புச் செய்யப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முறையாக கண்காணிப்புச் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஐ) | 2020-2021 ஆம் ஆண்டின் போது 100,000 கிலோ மீற்றர் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராமிய வீதிகளை நிர்மாணிப்பதற்கு உலக வங்கியின் உதவியின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட "Inclusive Connectivity and Development" செயற்திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 2,112.11 மில்லியன் வழங்கப்பட்டிருந்தும் அப்பெறுமதியை அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு அல்லது அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உலக வங்கியின் கடன் உதவியின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற உட்படுத்தும் தொடர்புபடுத்தல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் மீள்நிதியளித்தல் வசதிகளின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 2,712.11 மில்லியன் பணம் மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுகளின் மூலம் உரியவாறு வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ருவன்புர அதிவேக வீதி செயற்திட்டத்தின் கீழ் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 1630.68 மில்லியன் தொகையான காணிச் சுவீகரிப்பு செலவுகளை மூலதனமாக்காததன் காரணமாக காணிச் சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்தும் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | கலைத்தல் கணக்குகளைப் பெற்றதன் பின்னர் அச்செலவுகள் அதிகார சபையின் ஏடுகளுக்கு எடுத்துக்கொள்ளப்படும். | சுவீகரிக்கப்பட்ட காணிகள் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் முறையான கண்காணிப்புடன் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,334.75 மில்லியனாக இருந்த போதிலும் அது ரூபா 1,400.34 மில்லியனாக முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து பெற்ற காசுப் பாய்ச்சல் ரூபா 65.59 மில்லியனால் அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | | தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஔ) | வெளிநாட்டுக் கடன் மற்றும் உள்நாட்டு வணிக வங்கி கடனின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் தேவைப்பாட்டிற்காக கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் செயற்திட்டங்களுக்கு மத்தியில் பரிமாற்றம் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அதிகார சபையின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் நாளதுவரையாக பதிவு செய்யப்படும் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்காததனால் 8,329 அலகு சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களின் சொத்துக்கள் அந்த அந்த செயற்திட்டங்களுக்கு மத்தியில் பரிமாற்றம் செய்யப்படுவதனைத் தவிர்த்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அடிக்கடி சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்தும் அச்சுற்றறிக்கைக்கு முரணாக பதிவேடுகளில் உள்ளடக்கப்படாது செயற்திட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. | அனைத்து சொத்துக்களும் பொருள் இருப்பு பதிவேட்டிற்கு கொண்டுவரப்பட்டு முறைப்படியாக மாற்றம் செய்யப்படுதல் வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட தேறிய பிற்போட்ட சொத்துக்களின் (Net deferred assets) பெறுமதி ரூபா 65.61 மில்லியனை கடன்பட்டோர் பெறுமதியின் கீழ் காட்டியதன் காரணமாக கடன்பட்டோர் பெறுமதி அத்தொகையால் அதிகரித்தும் நடைமுறையற்ற சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் குறைத்தும் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை பிற்போட்ட சொத்துக்களின் (Deferred Assets) பெறுமதி கடன்பட்டோர் பெறுமதியின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | பிற்போட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தனியான ஒரு விடயத்தின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். |

**1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி (ரூபா மில்லியன்) | துணை அறிக்கைக ளின் பிரகாரம் பெறுமதி (ரூபா மில்லியன்) | வித்தியாசம் (ரூபா மில்லியன்) | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|---|
| (அ) | கட்டிடங்கள் இயந்திரங்கள் என்பவற்றை உள்ளடக்கிய நடைமுறையற்ற சொத்தக்கள் | 961.71 | 815.74 | 145.96 | மீதிகளின் இணக்கமின்மையைப் பரீட்சித்து தேவையான சரிசெய்தல்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | உரிய தவறுகளை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் வரையறுத்த மகனெகும வீதி நிர்மாணிப்பு மற்றும் இயந்திரங்கள் (தனியார்) கம்பனிக்குமிடையேயான நடைமுறைக் கணக்குகளுக்கிடையிலான வித்தியாசம். | 88.64 | 99.51 | 10.87 | மகனெகும கம்பனியிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டிருந்தும் உரிய தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. | உரிய கணக்கிணக்கத்தினை காலரீதியாக மேற்கொண்டு வித்தியாசத்தினை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அதிவேகப் பாதையின் கீழ் மூலதனமாக்கப்பட்ட காணிகளை சுவீகரித்தல் செலவுகளும் காணிப் பிரிவினால் பேணப்படுகின்ற அத்தகவல்களுக்குமிடையிலான வித்தியாசம் | 33,815 | 17,169 | 16,646 | முறையாக ஆய்வு செய்ததன் பின்னர் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தகவல்களை நாளதுவரையாக்கி சரியானது என உறுதிப்படுத்துதல் வேண்டும். |

**1.5.5 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் அதிகாரச் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் மற்றும் 2011 நவம்பர் 18 ஆந் திகதிய 1732/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் அதிவேக வீதிக் கட்டணமாக சேர்த்துக்கொள்ளப்பட்ட பணம் அதிகார சபையின் நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டியதுடன் கட்டணத்தை அறவிடுகின்ற மற்றும் | பெருந்தெருக்கள் அமைச்சின் வேண்டுதலுக்கு இணங்க பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு இணங்க ரூபா 1000 மில்லியன் பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் அதிவேகப் பாதையை நிர்மாணிப்பது தொடர்பாக மத்திய | தேசிய வீதிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பராமரிப்பதற்காக அந்த நிதியம் பயன்படுத்துதல் வேண்டும். எனினும் அந்த விடயங்களுக்கு முரணாக அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படுகின்ற நிதியத்திலிருந்து ரூபா 1,000 மில்லியன் மீளாய்வாண்டின் போது பெருந்தெருக்கள் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. | அதிவேகப் பாதை செயற்திட்டம் I மற்றும் ருவன்புர அதிவேகப் பாதை செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டது. | |
| (ஆ) | 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் அதிகாரச் சட்டத்தின் 4(3) ஆம் பிரிவின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபை, உரிய மாகாண சபைகள், உரிய உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய முகவர் நிறுவனங்களினால் பெறுப்பேறகப்பட்டுள்ள மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தை உறுதியாகக் காட்டுகின்ற ‘‘ஒருங்கிணைந்த வீதி முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரிப்பதற்கான செயல் நடவடிக்கைத் திட்டம்’’ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக கௌரவ அமைச்சருக்கு தெரியப்படுத்தியதன் பின்னர் உரிய குழுவினை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் குழுவினால் வழங்கப்படும் ஆலோசனைகளின் பிரகாரம் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | தேசிய வீதிகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒருங்கிணைந்த வீதி முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரிப்பதற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2005 நவம்பர் 03 ஆந் திகதிய அமைப/05/1711/016/110 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வீதிகளைப் பராமரிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினை தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை இந்த அமைச்சரவை தீர்மானத்தினை அமுல்ப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கும். | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க வீதிகளை பராமரிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தோற்றுவிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.6 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அதிகார சபை அதன் துணைக்கம்பனிகளான வரையறுத்த மகனெகும இமல்சன் உற்பத்தி (தனியாரர்) கம்பனி, வரையறுத்த மகனெகும ஆலோசனை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனி, வரையறுத்த மகனெகும வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் இயந்திரங்கள் (தனியார்) கம்பனி, மற்றும் வரையறுத்த அதிவேக போக்குவரத்து (தனியார்) கம்பனி ஆகிய கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களை ஒருங்கிணைத்து தொகுதிக்குரிய ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களை ஒருங்கிணைத்து தொகுதிக்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாமை சம்பந்தமான விடயங்கள் கணக்கீட்டுக் கொள்கைகளின் குறிப்பு இலக்கம் 2.2 இல் காட்டப்பட்டுள்ளது. | அதிகார சபையினால் துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்களை ஒருங்கிணைத்து தொகுதிக்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.7 கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 767,872.2 மில்லியன் பெறுமதியான எக்ரோ விடயம் (Acroew Item), அதிவேகப் பாதை | தனித்தனியான சொத்துக்கள் பதிவேடு, அதிவேகப் பாதை பெறுமதியை அரசாங்க மானியமாக பதிவழிப்பதற்கு திறைசேரியிடமிருந்து பெற்ற இணக்கப்பாடு | உரிய சொத்:துக்களைத் தவிர்த:து ஏனைய சொத்துக்கள் பதிவேடு CD தட்டின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதிவேக வீதி மற்றும் ஏனைய செயற்திட்டங்களை பூர்த்திசெய்ததன் பின்னர் உரிய வரிசை அமைச்சினால் அச்சொத்துக்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சட்டரீதியாக ஒப்படைப்புச் செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய விபரமான பதிவேடு அதிகார சபையினால் பேணப்படுதல் வேண்டும். மற்றும் தேவைப்படுகையில் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல், வீதிப் காப்பரன்களைப் பயன்படுத்துதல், வீதிக் காப்பரன்களை பகிரங்கப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவற்றிற்காக 28 வெளி நிறுவனங்களிடமிருந்தும் 05 தனிப்பட்டவர்களிடமிந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 50.07 மில்லியனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது ரூபா 4.09 மில்லியன் அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பதவியணியிலுள்ள 290 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது 18 செயற்திட்ட அலுவலகங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் உரிய பதவியணிக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ரூபா 65.1 மில்லியன் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய சம்பளத்தை மீளளிப்புச் செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் பெறவேண்டிய இந்த 18 செயற்திட்டங்களில் 07 செயற்திட்டங்களின் வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் முடிவடைந்திருந்தது. | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயற்திட்டங்களிலிருந்து 2023 சனவரி மாதத்தின் போது ரூபா 6.6 மில்லியன் பணம் கிடைத்திருந்ததுடன் மிகுதிப் பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய செயற்திட்டங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டன. | செயற்திட்ட பதவியணிக்கான பணத்தை மீளாய்வு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகள் தொடர்பாக 100,000 கிலோ மீற்றர் வீதி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்களுக்கு 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் நிதி ஏற்பாட்டினை மிகைத்து செலுத்தப்பட்ட ரூபா 6.19 மில்லியன் பணத்தை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் உரிய மீதியினுள் அதிகார சபையில் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3.03 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இப்பணத்தை செலுத்துமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது டன் அதற்கு மேலதிகமாக எதிர்காலத்தில் செலுத்துவதற்கு தகமைபெற்றுள்ள பணத்திலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கிறேன். | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாட்டினை மிகைத்து நடவடிக்கை எடுக்காதிருக்க வேண்டியதுடன் மிகையாகச் செலுத்திய பணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் அதன் துணைக்கம்பனிகளுககுமிடையே இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்காக பேணப்படுகின்ற கம்பனிகளுக்கிடையிலான கணக்குகளில் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 107.17 மில்லியன் மற்றும் 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 314.58 மில்லியன் அதிகார சபைக்கு கிடைக்க வேண்டியதாகக் காட்டப்பட்டிருந்தும் உரிய மீதிகளை தீர்ததுவைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற இணக்கமின்மைகள் சம்பந்தமாக உரிய கம்பனிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது டன் அவற்றினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கம்பனிகளுக்கிடையிலான கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பிற்போட்ட வெளியீட்டு வரி (Deferred output tax) ரூபா 79.58 மில்லியனாக இரந்ததுடன் இந்த மீதியினுள் 05 ஆண்டுகளை மிகைத்த காலமாக காணப்பட்டு வரும் மீதிகளின் மொத்தம் ரூபா 35 மில்லியனாக இருந்த போதிலும் ஆண்டின் இறுதிவவரை உரிய மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிற்போட்ட வெளியீட்டு வரி Deferred output tax) ரூபா 79.58 மில்லியனில் ரூபா 19.69 மில்லியன் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. தெற்கு அதிவேகப் பாதை செயற்பாடுகளை பராமரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் அலகிற்குரிய பெறுமதியை திர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2011 இலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 16.5 மில்லியனுக்குரிய பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்கிய பணவைப்பு மற்றும் முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்கு அல்லது பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த மீதியினுள் 2011 ஆம் ஆண்டின் போது தெற்கு அதிவேகப் பாதையை திறக்கும் விழாவினை ஒழுங்குபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவில் 50 சதவீத பெறுமதியான ரூபா 5 மில்லியனும் உள்ளடங்கியுள்ளது. | 2011 இலிருந்து 2020 வரையான காலத்தில் வழங்கியுள்ள பட்டோலை 87, 90, 92 மற்றும் 95 இல் குறிப்பிட்ட முற்பணங்களின் மொத்தம் ரூபா 16.5 மில்லியனாகும். இன்றுவரை இம்முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு உரிய பிரிவுத்தலைவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டு வருகின்றது. | முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்கு அல்லது பணத்தை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 104-108 | • ஒரு நட்டம் ஏற்படுகையில் நட்டத்தின் அளவு மற்றும் காரணத்திற்கான விடயங்களை நிர்ணயிப்பதற்கும் அது தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டியவர்களை அடையாளம் காண்பதற்கும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது இடம்பெற்றுள்ள 121 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டத்தையும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 02 தொடக்க புலனாய்வுகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் அனைத்து வாகன விபத்துக்களுக்குமான தொடக்க புலனாய்வினை மேற்கொள்வதற்கு உரிய பிரிவிற்கு தெரியப்படுத்தி ஒரு சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க நட்டங்கள் மற்றும் சேதங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | • வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மகனெகும வீதி நிர்மாணிப்பு மற்றும் இயந்திர கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த 02 வாகனங்கள் 2022 மே 09 ஆந் திகதி இடமபெற்ற கலவரத்தின் காரணமாக முழுமையாகச் சேதமடைந்திருந்ததுடன் அதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட காப்புறுதி இழப்பீட்டுப் பணம் ரூபா 27.5 மில்லியனாக இருந்த போதிலும் உரிய இழப்பீட்டுப் பணம் மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைத்திருக்கவில்லை. மேலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நட்டத்தின் அளவு மற்றும் காரணத்திற்கான விடயத்தினை நிர்ணயிப்பதற்கும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 மே 09 ஆந் திகதி இடம்பெற்ற கலவரத்தின் காரணமாக முழுமையாக சேதமடைந்த அந்த இரண்டு வாகனங்கள் சம்பந்தமாக பொலிஸின் மூலம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது டன் முழுமையான சேதமாக தகமையினைப் பெற்றுக்கொள்வதற் கு பணிப்பாளர் சபையினது அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட் டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை நிர்ணயித்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 135(4) | நிதி அதிகாரத்தினை ஒப்படைக்கும் பதிவேடு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு ஒரு தடவை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையினால் அப்பதிவேடு 2020 ஆம் ஆண்டின் பின்னர் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவி ல்லை. | தற்பொழுது நாளதுவரையாக்கப்ப ட்டு வருவதுடன் 2023 ஆம் ஆண்டு யூலை மாதமளவில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின் றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிதி அதிகாரத்தினைப் பகிர்தல் வருடாந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | அரசாங்க விடுமுறை தினத்தில் வேலை செய்வதற்காக விடுமுறை தினச் சம்பளம் செலுத்துவது சம்பந்தமாக தாபன விதிக்கோவையில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தாபன பணிப்பாளரிடம் விசாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இல்லாது அலுவலகச் சேவைக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் அலுவலக நேரங்களின் பின்னர் சேவையில் ஈடுபடுத்துகின்ற மணித்தியாலங்களின் மொத்தம் | இக்கணக்காய்வுப் பந்தியுடன் இணங்கிகொள்ளப்ப டுகின்றது. | தாபன விதிக் கோவையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க படிகள் செலுத்தப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணிக்கப்பட்டு 08 மணித்தியால காலத்திற்காக ஒரு விடுமுறை தினமாகக் கருதி விடுமுறை தினச் சம்பளம் செலுத்துதல் இடம்பெற்றிருந்தது. அதற்கிணங்க அதிவேக வீதி செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு சேவையாற்றுகின்ற பதிவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 2022 சனவரியிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ரூபா 6.84 மில்லியன் விடுமுறை தினப்படியானது காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு முரணாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு | வாழ்க்கைச் செலவுப் படிக்கு மேலதிகமாக அதிகார சபைக்கே விசேடத்துவமான பல்வேறு நோக்கங்களுடன் செலுத்தப்படுகின்ற வீதி அபிவிருத்தி அதிகார சபை படி, மேலதிக வேலைப்படி, சீராக்கல் படிகள், பொறியியலாளர் படிகள், என்பவைகளை உள்ளடக்கிய 12 படிகள் கவனத்திற்கு எடுத:துக்கொள்ளப்பட்டு பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பணிக்கொடையை ஒதுக்கீடு செய்தல் பெறுமதி ரூபா 1,232.83 மில்லியனால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் அங்கீகரிக்கப்படாத படிகளை உள்ளடக்கி பணிக்கொடை கொடுப்பனவு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 40.92 மில்லியன் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | வீதி அபிவிருத்தி அதிகாரச் சபையினால் பணிக்கொடையை கொடுப்பனவு செய்யும் போது ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு பணத்தை கணிப்பீடு செய்வதற்கு வாழ்க்கைச் செலவுப் படிக்கு மேலதிகமாக 04 படிகள் பணிப்பாளர் சபையின் அங்கிகாரத்தின் அடிப்படையில் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. | பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 சனவரி 24 ஆந் தகிதிய 02/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை பிரிவு 1 | அதிகார சபையினால் மனித வளங்களை அபிவிருத்தி | ஆட்சேர்க்கும் நடைமுறையானது | அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் பதவியணியினர்களுக்காக வருடாந்த செயலாளற்றல் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு அல்லது செயலாற்றலினை மதிப்பீடு செய்யும் நடைமுறையினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ செவைகள் திணைக்களத்திற்கச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணங்க செயலாளற்றல் உடன்படிக்கைகளில் கையொப்பமிடப்பட வேண்டியதுடன் மதிப்பீடு செய்யும் நடைமுறை பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| | பிரிவு 5 | மனிதவளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர்களை ஒன்று சேர்ப்பதிலும் வளவாளர்களை அழைப்பதிலும் நடைமுறைச் சிக்கல் காணப்பட்டது. | அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மானிட அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை | | | |
| | (i) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பின்னிணைப்பு II இன் பந்தி இலக்கம் 04 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்புரைக்கு மற்றும் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையை தயாரிப்பதற்கு உட்பட்டு அத்திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியிர்களை மீள்மதிப்புச் செய்யும் சிபாரிசுகளை அமுல்ப்படுத்தாது அதிகார சபையனால் 14 பதவிகளுக்கு 259 உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். இந்த உத்தியோகத்தர்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டங்களின் தொடக்க சம்பளத்தினைவிட அதிக சம்பள அளவுத் திட்டத்தில் அமர்த்தி சம்பளம் கொடுக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 56.78 மில்லியன் சம்பளமாக மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | சிரேஷ்ட முகாமைத்துவ தொகுதிக்குரிய சம்பள குறியீடுகள் மற்றும் சமபள கட்டமைப்புக்கள் பணிப்பாளர் நாயகத்தின் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கிகாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். பதவிக்காக அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தினை விட அதிக சம்பள அளவுத்திட்டம் செலுத்தப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 28(II) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்படாத 12 பதவிகளுக்காக 51 உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொண்டு மீளாய்வாண்டின் போது ரூபா 23.6 மில்லியன் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | 06 பதவிகள் தொடர்பான பதவிகளும் ஊழியர் எண்ணிக்கையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் சம்பளக் குறியீடு மாத்திரம் அங்கீகரிக்கப்படவில்லை. மற்றைய 06 பதவிகள் தொடர்பான பதவிகள், சம்பளக் குறியீடு மற்றும் எண்ணிக்கை அங்கீகரிக்கப்படவில்லை. | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். |
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டிக் கோவை | | | |
| | (i) பிரிவு 3.2 | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக (Scheme of Recruitment) பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் சிபாரிசுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகார சபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த நிலைமையானது 2005 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்றது. | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையானது முகாமைத்துவ சேவவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அதற்காக இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) பிரிவு 3.3 | அதிகார சபையினால் தயாரிக்கப்படுகின்ற தந்திரோபாய திட்டத்தில் நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் (Divisions of the SOE) ஊழியர் தேவைப்பாடு, மனிதவளங்கள் திட்டத்தினைப் போல (Human Resource Plan) காட்டப்பட வேண்டிய போதிலும் | ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துக்கொள்வதற்கும் இந்த அதிகார சபையின் தாபனக் கட்டமைப்பினை மீளமைப்புச் செய்வதற்கும் | அரசாங்கத்தின் தொழில்முயற்சிகளுக்கான வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | அவ்வாறான துறைசார்ந்த ஊழியர் தேவைப்பாடு இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சமாந்தரமாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,488 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய அண்டிற்கான மிகை ரூபா 78,864 மில்லியனாகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 73,376 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயற்திட்ட வேலைகளைப் பூர்த்திசெய்ததன் பின்னர் அச்செயற்திட்டங்களின் சொத்துக்களை மூலதனமாக்குவது தொடர்பாகப் பெற்ற மூலதன மானியம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 64,079 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் நிதிக் கிரயம் ரூபா 37,983 மில்லியனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது. எவ்வாறாயினும் மீண்டுவரும் செலவுகளுக்காக வரிசை அமைச்சினூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட மானியமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 24,978 மில்லியனால் அதிகரித்திருந்தது.

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையினால் தீர்த்துவைக்கப்படாதிருந்த ஒட்டுமொத்த கடன் மீதி ரூபா 356,058 மில்லியனாக இருந்ததுடன் அது ரூபா 264,893 மில்லியன் வங்கி கடன்களையும் ரூபா 91,166 மில்லியன் தொகுதிக் கடன்களையும் உள்ளடக்கியிருந்தது. 100,000 கிலோமீற்றர் வீதிகள் நிகழ்ச்சித்திட்டம் மத்திய அதிவேக வீதி, நிர்மாணம், பெருந்தெருக்களை விரிவுபடுத்தலும் மேம்படுத்தலும் மற்றும் அதிகார சபையின் தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்காக இக்கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் கடனுக்கான வட்டி நிறையூட்டப்பட்ட தொடக்க கடன் விகிதத்திற்கு உச்ச அளவாக 2 சதவீத்திலிருந்து 2.8 சதவீதம் வரையான வீச்சுடைய பெறுமதி சேர்க்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த அனைத்து கடன்களையும் பெற்றுக்கொள்ளும் போது திறைசேரி பிணை வழங்கப்பட்டிருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் பகுப்பாய்வு

| விடயம் | தொடர்புபட்ட ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாற்றமடையும் சதவீதம் | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாற்றமடையும் போக்கு |
|---|---|---|
| மீண்டுவரும் மானியம் | 30 | அதிகரித்தல் |
| மூலதன மானியம் | 78 | குறைவடைதல் |
| தேறிய அதிவேக வீதி வருமானம் | 81 | குறைவடைதல் |
| அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவு | 43 | குறைவடைதல் |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான உள்நாட்டு வங்கி கடன் வட்டியை தீர்த்துவைப்பதற்கு கிடைக் வேண்டிய மானியம் ரூபா 34,844 மில்லியனால் அதிகரித்தமை மீண்டுவரும் மானியம் 30 சதவிதத்தால் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

(ii) செயற்திட்ட வேலைகளைப் பூர்த்திசெய்ததன் பின்னர் அச்செயற்திட்டங்களின் சொத்துக்களை மூலதனமாக்கியதன் மூலம் பெற்ற மூலதன மானியம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 64,079 மில்லியனால் குறைவடைதல் மூலதன மானியம் 78 சதவீதத்தால் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது.

(iii) மீளாய்வாண்டில் மிகைக்கட்டண வரி மற்றும் நிதிக்கிரயம் அதிகரித்தல் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக அதிவேக வீதிப் பயன்பாடு மட்டுப்படுத்தப்படல் தேறிய அதிவேக வீதி வருமானம் 81 சதவீத்தால் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தது.

(iv) பராமரித்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக வரிசை மற்றும் இராஜாங்க அமைச்சினூடாக பெற்ற மானியம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 13,591 மில்லியனால் குறைவடைதலானது அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவுகள் 43 சதவீத்தால் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தது.

**2.3 விகிதாசார பகுப்பாய்வு**

| **விகிதாசாரம்** | **2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **முன்னைய ஆண்டுன் ஒப்பிடுகையில் வித்தியாசம் அனுகூலமானதா அல்லது பிரதிகூலமானதா என்பது** |
|---|---|---|---|
| நடைமுறைவிகிதம் | 1.1 | 1.39 | பிரதி கூலம் குறைவடைதல் |
| விரைவு விகிதம | 1.09 | 1.37 | பிரதி கூலம் குறைவடைதல் |
| தேறிய இலாப விகிதம் | 4 | 45 | பிரதி கூலம் குறைவடைதல் |
| கடன் உரிமை மூலதன விகிதம் | 0.45 | 0.46 | அனுகூலம் குறைவடைதல் |
| மொத்த கடன் - மொத்த சொத்துக்கள் விகிதம் (சதவீதம் ) | 28.67 | 30.28 | பிரதி கூலம் அதிகரித்தல் |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை விகிதமும் விரைவு விகிதமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மேற்கூறிய விகதங்களில் குறைவினைக் காட்டியிருந்தது. செலுத்த வேண்டிய கடனின் வட்டிச் செலவு ரூபா 25,785 மில்லியனால் அதிகரித்தல் இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

(ii) மீளாய்வாண்டின் தேறிய இலாப விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 41 சதவீத குறைவினை வெளிக்காட்டுவதுடன் அதற்காக மூலதன மானியம் ரூபா 64,079 மில்லியனால் குறைவடைதல், கடன் வட்டிச் செலவு ரூபா 34,695 மில்லியனால் அதிகரித்தல் மற்றும் அதிவேக வீதிச் செலவு ரூபா 2,796 மில்லியனால் அதிகரித்தல் பிரதான காணரமாக இருந்தது.

(iii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிண்டகாலக் கடன் 2.3. சதவீத்தால் வீழ்ச்சியடைகையில் அத்திகதியில் அதிகார சபையின் உரிமை மூலதனம் 3.1 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்தல் கடன் உரிமை மூலதன விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அனுகூலமாக இருந்தமை தொடர்பாக தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதிகார சபையினால் குறுங்கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,226.43 மில்லியன் வரிசை அமைச்சின் | நாட்டில் காணப்பட்ட கலவர சூழ் நிலையின் அடிப்படையில் வரிசை அமைச்சுக்கு பணம் கிடைக்கவில்லை. வீதி அபிவிருத்திக்கு | இவ்வாறு அதிகார சபைக்கும் அமைச்சுக்குமிடையே நிதியை பரிமாற்றம் செய்வதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டுதலின் அடிப்படையில் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக அதிகார சபையினால் இழக்கப்பட்ட வட்டி வருமானம் ரூபா 410.69 மில்லியனாகும். அவ்வாறே பொதுத்திறைசேரியின் இணக்கப்பாடு இன்றி வரிசை அமைச்சின் செலவு விடயங்களுக்கு பணத்தை வழங்குதல் கணக்காய்வில் ஒரு சச்சரவுத் தன்மையான விடயமாகும். | வழங்கப்படுகின்ற காணிகளுக்காக இழப்பீட்டுப் பணம் கிடைக்காமையால் பொது மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் காரணமாக இக்கடன் பணத்தை வழங்க வேண்டி ஏற்பட்டது. | பொதுத்திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மத்திய அதிவேக வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2019 நவம்பர் 18 ஆந் திகதி இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 4,312 மில்லியன் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அக்கடன் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1,500 மில்லியன் நிலையான வைப்புக்கள் பிணையாக வைக்கப்பட்டிருந்தும் நிலுவையான வைப்புக்களை ஆரம்பிக்கும் போது வட்டி வருமானத்தை ஏனைய வங்கி கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு வங்கிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க கடன் பணத்தை செலுத்தி முடிவுறுத்தும் வரை வட்டிப் பணத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது வட்டிப் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு வங்கியுடன் கடிதங்கள் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும் வெற்றியளித்திருக்கவில்லை. 2023 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் மீண்டும் வட்டிப் கட்டணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் | வட்டிப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக வங்கியுடன் இணக்கப்பாட்டிற்கு வருதல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் 2019 இலிருந்து 2021 வரை ஒவ்வொரு ஆண்டிற்குமான நிதிக்கூற்றுக்களில் மீள் செம்மையாக்கல் (Re-state) செய்யப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக செலுத்த வேண்டிய வருமானவரி ரூபா 209.5 மில்லியனால் குறைவடைந்திருந்தது. அதற்கிணங்க மிகையாகச் செலுத்திய வருமான வரியினை கழிக்க வேண்டிய போதிலும் அந்த மிகைக் கொடுப்பனவினை ஆண்டின் போது செலுத்த மிகைக் கொடுப்பனவினை ஆண்டின் போது செலுத்த வேண்டிய வருமான வரிக்கு | திருத்தப்பட்ட 2023 இன் 04 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 151(1) ஆம் பிரிவின் பிரகாரம் அப்பெறுமதியில் 60% மாத்திரம் எதிரீடு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க எதிர்காலத்தில் அப்பணத்தை எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய வருமானவரிப் பெறுமதியை சரியாகக் கணக்கிட்டு வரி செலவினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியின் இலத்திரனியல் கட்டண அறவீட்டிற்காக 2014 திசெம்பர் 18 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபை இலங்கை வங்கியுடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் 2020 யூன் 08 ஆந் திகதியுடன் முடிவடைந்து 02 ஆண்டுகளை மிகைத்திருந்தும் புதிய உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செல்லுபடியான உடன்படிக்கை இல்லாது 2020 இலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான 03 ஆண்டுகளுக்காக கொடுக்கல் வாங்கல் கிரயமான (Transaction Cost) மொத்தமாக ரூபா 19.7 மில்லியன் இலங்கை வங்கிக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | புதிய உடன்படிக்கையினைத் தயாரிப்பதற்காக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் ஒரு மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அக்குழுவிற்கும் இலங்கை வங்கிக்குமிடையே கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன் இரு தரப்பினர்களுக்குமிடையே இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்படாதிருந்த போதிலும் கொடுக்கல் வாங்கல் கட்டணத்தை ரூபா 4 வரை குறைப்பதற்கு இணங்கிக்கொள்ளப்பட்டது. | அதிவேக வீதியில் இலத்திரனியல் கட்டணம் அறவீடு செய்வது சம்பந்தமாக அதிகார சபைக்கு வினைத்திறனான புதிய உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு இணங்க கொழும்பு கட்டுநாயக்கா அதிவேக வீதியின் இலத்திரனியல் கட்டண கொடுப்பனவு முறைமையை பயன்படுத்துபவர்களை ஊக்குவிப்பதற்காக இலத்திரனியல் கட்டணம் செலுத்தும் முறைமைக்கு மாற்றம்பெறுகின்ற தொடக்க 06 மாத காலத்திற்குள் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களில் 10 சதவீத கழிவினை அந்த வீதியினைப் பயன்படுத்துபவர்களுக்கு வழங்குவதற்குத் திர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அங்கிகாரமின்றி அக்கால எல்லையின் பின்னரும் அக்கழிவு முறைமை அமுல்ப்படுத்தப்பட்டதனால் 2022 ஆம் ஆண்டு தொடர்பாக ரூபா 33 மில்லியனை உள்ளடக்கி 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான 03 ஆண்டுகளுக்காக மொத்தமாக ரூபா 89 மில்லியன் வருமானத்தை அதிகார சபை இழந்திருந்தது. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் 06 மாத காலம் ETC இனை பயனபடுத்துபவர்களுக்கு 10 சதவீத கழிவு வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த 10 சதவீத கழிவினை 20 சதவீதம் வரை அதிகரிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததானது ETC பயன்படுத்துவோர்களை கவர்வதனை அதிகரிப்பதற்காகவாகும். எவ்வாறாயினும் ஏற்படக்கூடிய நட்டத்தை குறைப்பதற்காக 10 சதவீத கழிவு தொடர்ச்சியாக பேணப்பட்டு வந்தது. | ETC பாவனையாளர்களுக்கு கழிவினை வழங்கும் குறிக்கோளை நிறைவேற்றுவது தொடர்பாக மீளாய்வு செய்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த இடமாற்றம் கொள்கையின் பிரகாரம் பிரசித்தி பெற்ற சேவை நிலையத்தில் 05 ஆண்டுகள் அல்லது பிரசித்தியற்ற சேவை நிலையத்தில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவையாற்றியிருத்தல் இடமாற்றத்திற்கு வேண்டுவதற்கு தகைமையாக இருந்தும் பிரசித்திபெற்ற சேவை நிலையத்தில் 05 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் பூரணப்படுத்தப்படுதல் மற்றும் அதற்கு முன்னர் பிரசித்தியற்ற சேவை நிலையத்தில் 03 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் சேவையாற்றியிருக்காத நபர்கள் இடமாற்றத்திற்காக வேண்டிக்கொள்ளாதிருந்தும் சேவையின் அத்தியாவசியத்தின் அடிப்படையில் இடமாற்றம் செய்வதற்கு உட்படுத்தப்பட்டனர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் தங்காலை பொறியியலாளர் அலுவலகத்தில் 05 ஆண்டுகள் சேவைக் காலத்தை மிகைத்து 34 உத்தியோகத்தர்கள் சேவையாற்றியிருந்தனர். | 2024 ஆம் ஆண்டிற்காக எதிர்காலத்தில் வருடாந்த இடமாற்றத்திற்காக விண்ணப்பங்களை கோருவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. இதன் போது இடமாற்றத்திற்கு வேண்டியுள்ள நபர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகார சபையின் இடமாற்ற கொள்கையை முறைப்படியாகவும் நியாயமான வகையிலும் மற்றும் ஆக்கபூர்வமான மற்றும் வினைத்திறனான சேவையை வழங்கக்கூடிய வகையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதிவேக வீதி நிர்மாணத்திற்காக காணிகளை சுவீகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 33,815.28 ஆக இருந்த போதிலும் அது தொடர்பாக காணிப் பதிவேடு அதிகார சபையின் காணிப் பிரிவினால் பேணப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட காணித் தகவல்கள் அதிகார சபையின் தரவு அறிக்கைகளில் சரியாக குறிப்பிடப்படவில்லை. | அதிவேக வீதி நிர்மாணத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் அதிகார சபையின் காணிப் பதிவேட்டில் பதியப்படுதல் வேண்டும். |
| (ஊ) | அதிகார சபையின் வரையறுத்த அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனி 2016 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. அவ்வாறே மகனெகும நிர்மாணங்கள் மற்றும் இயந்திரங்கள் கம்பனியின் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக மறுப்பு அபிப்பிராயம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிற்காக பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வரையறுத்த அதிவேக வீதி போக்குவரத்து (தனியார்) கம்பனி 2016 இலிருந்து 2018 வரையான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துள்ளது. கமனெகும நிர்மாணங்கள் மற்றும் இயந்திரங்கள் கம்பனியின் 2018 இலிருந்து 2021 வரையான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் உரிய காலத்தில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன என்பதனை தாய் நிறுவனம் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 2007 இன் 07 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 133 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு கம்பனியால் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவை பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் அதிகார சபைக்குச் சொந்தமான அதன் 04 துணைக் கம்பனிகள் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | துணைக்கம்பனிகளில் சில நிறுவனங்களை ஸ்தாபிக்கும் போது பங்குகளின் உரிமை தொடர்பாக உருவாகியுள்ள சட்டச் சிக்கலினால் அந்த நிறுவனங்கள் வருடாந்த பொதுக் கூட்டங்களை கூட்டாதிருப்பதற்கு தீர்மானித்துள்ளன. | கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வருடாந்த பொதுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2023 மார்ச் 20 ஆந் திகதிய CP/23/0394/608/033 ஆம் இலக்கத்தின் பிரகாரம் அதிகார சபையின் 04 துணைக் கம்பனிகளை கலைப்பதற்கு திர்மானிக்கப்பட்டிருந்ததன் காரணமாக உரிய கம்பிகள் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஒரு விசேட குழுவின் மூலம் துணைக் கம்பனிகளை கலைத்தல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனிகளை முறைப்படியாக கலைத்து அதிகார சபையின் வளங்களை மீளப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் ரூபா 228.6 மில்லியன் கிரயமான 19 வாகனங்கள் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் பிரதம மந்திரியின் அலுவலகத்திற்கும் ரூபா 83.5 மில்லியன் கிரயமான 11 வாகனங்கள் மகனெகும நிர்மாணங்கள் மற்றும் இயந்திரங்கள் கம்பனிக்கும் வழங்கப்பட்டிருந்ததுடன் அதிவேக வீதியின் கடமைத் தேவைப்பாட்டிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 281.35 மில்லியன் செலவு செய்து வெளிநிறுவனங்களிடமிருந்து வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | அதிவேக வீதி முறைமையை செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கை 24 மணித்தியாலங்கள் முழுவதும் ஈடுபடுத்தப்படுவதுடன் அச்செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணுவதற்கு இந்த வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டன. | அதிகார சபையின் பயன்படுத்தாத வாகனங்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் மற்றும் அதன் மூலம் கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விபரத்தின் பிரகாரம் 14 செயற்திட்டங்களுக்காக சுவீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த காணித்துண்டுகளின் எண்ணிக்கை 48,427 ஆக இருந்ததுடன் காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதிகார சபைக்கு உரிமை ஒப்படைக்கப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை 4,543 | பதில் வழங்கப்படவில்லை. | காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை முடிவுறுத்தி உரிமையை பொறுப்பேற்பதற்கும் அவற்றை அதிகார சபையினால் கணக்குகளில் அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது அவற்றில் 09 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | | வேண்டும். |
| (இ) | கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உள்நாட்டு வங்கிகளின் மூலம் செலுத்த வேண்டியுள்ள கடனின் அளவு ரூபா 356,059.32 மில்லியனாக இருந்ததுடன் கடனைப் பெற்றுச் கொண்டதனால் 05 ஆண்டுகள் காலத்தினுள் உள்நாட்டு வணிக வங்கிகளுக்கு செலுத்த வேண்டியிருந்த வட்டியின் அளவு ரூபா 108,970.36 மில்லியனாகும். மேலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வட்டி ரூபா 37,668.7 மில்லியனும் செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணமத்தின் பெறுமதி ரூபா 2,502.3 மில்லியனும் ஆகும். | 2022 ஏப்ரல் மாத்திலிருந்து நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கலினை முன்னிட்டு வட்டி விகிதம் மிகவும் அதிக அளவில் உயர்வடைந்ததன் காணரமாக 2022 ஆம் ஆண்டில் கடன் வட்டியானது வழமைக்கு மாற்றமாக அதிகரித்திருந்தது. இது AWPLR அதிகரிததனால் உருவாகிய நிலைமையாக இருந்ததுடன் நாடு நல்ல நிலைக்கு மாறுகையில் இச்செலவு குறிப்பிடத்தக்க அளவில் குறைவடையலாம். | பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை வினைத்திறனாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அதிகார சபையினால் 2 1/2 ஆண்டுகளுக்கும் 4 1/2 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட சலுகைக் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு 10 ஆண்டுகளுக்கும் 18 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தினுள் செலுத்தி முடிவு செய்யும் அடிப்படையில் 07 உள்நாட்டு வணிக வங்கிளிடமிருந்து 34 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 408,541.01 மில்லியனில் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இன்னும் செலுத்த வேண்டியிருந்த ரூபா 356,059.31 மில்லியன் பெறுமதியான கடன் தவணைப் பணக் கொடுப்பனவின் காலத்தை நீடித்து 2020 மார்ச் 13 ஆந் திகதியில் MFE/ERD/14/CM/2020/065 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு கடன் மீள் கட்டமைப்புச் செய்யப்பட்டிருந்தது. மீள்கட்டமைப்புச் செய்வதற்குரிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வங்கிக்கு ரூபா 10.80 மில்லியன் ஆலோசனைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்ததனால் வருடாந்தம் அதிகரித்த வட்டி விகிதத்தின் அடிப்படையில் ரூபா 400.74 மில்லியன் மேலதிக வட்டியினை அதிகார சபை | மக்கள் வங்கியும் இலங்கை வங்கியும் ஒருங்கிணைந்து கொடுக்கல் வாங்கல் ஆலோசனைக்காக நியமிக்கப்பட்டிருந்தும் இலங்கை வங்கிக்கு எந்தக் கட்டணமும் செலுத்தப்படாததுடன் மக்கள் வங்கியினால் ரூபா 20.0 மில்லியன் விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பொதுத்திறைசேரிக்கு இக்கடன் தவணைப் பணத்தை செலுத்துவதற்கு பணம் இல்லாததனால் கடன் தவணைப் பணத்தை செலுத்துதல் 10 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகள் வரை தாமதமடைந்திருந்தது. இக்காலத்தினுள் செலுத்த வேண்டிய கடன் வட்டி (அடிப்படை வட்டி) 0.75% இனை செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததும் அதனை 0.5% வட்டி விகிதத்திற்கு கடன் முகாமைத்துவத்தின் மூலம் | மீளச் செலுத்தும் இயலுமையினை கவனத்தில் கொண்டு கடனைப் பெற்றுக்கொள்வதன் மூலம் செலவு செய்யப்படுகின்ற செலவினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | குறைக்கப்பட்டிருந்தது. வருடாந்தம் அதிகரித்த வட்டி விகிதத்தின் அடிப்படையில் ரூபா 400.74 மில்லியன் மேலதிக வட்டிப் பணத்தை செலுத்துதல் என்ற விடயம் நேரடிக் கிரயம் என்பதாக மதிப்பீடு செய்து காட்டப்பட்டுள்ளது. | |
| (உ) | 2019 செப்தெம்பர் 25 ஆந் திகதி அமைப./19/2547/119/068-1 ஆம் இலக்க மற்றும் 2019 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய அமைப/19/1983/119/068 ஆம் இலக்க அமைச்சரவை திர்மானங்களின் பிரகாரம் மீரிகமவிலிருந்து குருனாகல் வரையான மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் இரண்டாம் பகுதியை அபிவிருத்தி செய்தல், நிலுவை விலைப்பட்டியலுக்கு பணம் செலுத்துதல், அந்த வீதியின் I, II மற்றும் III ஆம் பகுதிகளின் காணிச் சுவீகரிப்புக்களுக்கான இழப்பீட்டுப் பணத்திலிருந்து கடனைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் போது மீளக் கொடுப்பனவு செய்யும் இயலுமையின் அடிப்படையில் அதிவேக வீதியிலிருந்து சேகரிக்கப்படுகின்ற பணத்தை பயன்படுத்தி கடன் செலுத்தும் அடிப்படையில் 2019 நவம்பர் 18 ஆந் திகதி இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 4,312 மில்லியனும் 2019 ஒக்தோபர் 04 ஆந் தகிதி மக்கள் வங்கியிடமிருந்து ரூபா 3,688 மில்லியனுமாக மொத்தமாக ரூபா 8,000 மில்லியன் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இன்னும் செலுத்த வேண்டியுள்ள கடன் மீதிகள் முறையே ரூபா 2,084 மில்லியன் மற்றும் ரூபா 1,720.68 மில்லியன் ஆகும். அதற்கிணங்க அதிவேக வீதியின் வருமானத்தில் செலுத்தப்பட்டுள்ள கடன் தவணைப் பணத்தின் பெறுமதி ரூபா 4,195 மில்லியனாக இருந்ததுடன் இக்கடன் பணத்திற்காகச் செலுத்தப்பட்டுள்ள வட்டியின் அளவு அண்ணளவாக ரூபா 3,000 மில்லியனை அண்மித்திருந்தது.<br>மேலும் கடன் பணத்தை பயன்படுத்தி | மத்திய அதிவேக வீதி -II செயற்திட்டத்திற்காக உள்நாட்டு வங்கி கடன் திறைசேரியின் பிணைமுறியின் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த ரூபா 08 பில்லியன் உள்நாட்டுக் கடனை பெற்றுக்கொள்ளும் போது திறைசேரி பிணை முறியினை வழங்குவதற்கு இயலாமையினாலும் அனைத்து வெளிநாட்டு கடனுக்காகவும் பொதுத்திறைசேரியினால் பொறுப்பு வகிப்பதனாலும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முடியுமான அளவு அதிவேக வீதிகளிலிருந்து சேகரிக்கப்படுகின்ற வருமானத்தை பயன்படுத்தி உள்நாட்டு வங்கி கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அதிவேக வீதி செயற்திட்டத்தினை துரிதமாக முடிவுறுத்தி அச்செயற்திட்ட வருமானத்திலிருந்து கடனை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி செய்யப்பட்ட அதிவேக வீதியின் நிர்மாண வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன. | | |
| (ஊ) | உள்நாட்டு வங்கிகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்கான வட்டியும் தவணைப்பணமுமாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்த பணத்தை தீர்த்துவைப்பதற்காக திறைசேரிக்கு நிதி ஏற்பாடு வழங்கப்படாமையின் அடிப்படையில் 22.5 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் ரூபா 36,671.62 மில்லியன் திறைசேரி பிணைமுறி (Treasury Bonds) வழங்கப்பட்டிருந்தது. மேலும். உள்நாட்டு வங்கி மூலம் கடனை பெற்றுக்கொள்வதற்கு மேலதிகமாக 100,000 கிலோமீற்றர் வீதி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக வீதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக 36 ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 32,217.89 மில்லியனுகாக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 22.5 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டன. இந்த வகையில் திறைசேரி உண்டியல்களை வழங்கியதனால் அரசாங்கத்திற்கு மேலதிக செலவு செய்ய வேண்டியிருந்ததுடன் வருடாந்தம் அச்செலவு அண்ணளவாக ரூபா 15,155.69 மில்லியன் அளவில் இருந்தது. | நாட்டில் காணப்பட்ட கலவரமான சூழ் நிலையினை முன்னிட்டு செலுத்தப்படாத விலைப்பட்டியல் ரூபா 80.0 மில்லியன் அளவில் இருந்ததுடன் அதற்கான கட்டுநிதி திறைசேரியினூடாக அதிகார சபைக்கு கிடைக்கவில்லை. அதற்கான மற்றுத் தீர்வாக இந்த திறைசேரி பிணை முறிகள் வழங்கும் பிரேரணை முன்வைக்கப்பட்டது. அது செய்யப்படவில்லையாயின் நிர்மாணத்துறையானது முழுமையாக தடைப்படுவதற்கு வாய்ப்பிருந்ததனால் திறைசேரி பிணைமுறிகளை பெற்றுக்கொள்ளும் தூரநோக்குடன் எடுக்கப்பட்ட வினைத்திறனான ஒரு தீர்மானமாகும். இதன் பெறுபேறாக நாட்டில் பணப்புழக்கம் ஏற்பட்டு சிறிய அளவிலான நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் தமது செயற்பாடுகள் தொடர்பாக மீண்டும் உற்சாகம் ஏற்பட்டுள்ளது. | நிதி இல்லாது நிர்மாண செயற்திட்டங்களை ஆரம்பிக்காதிருக்க வேண்டியதுடன் சந்தை மாற்றங்களை கவனத்தில் கொண்டு ஆகக் குறைந்த கிரய நிலைமையின் கீழ் கடனை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 21(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் காணப்படுகின்ற வீதிகள் மற்றும் வீதிகளின் உரிமை அந்த உள்ளுராட்சி நிறுவனங்களுக்குரிதாகும். இதற்கிணங்க அதிகார சபையினால் அந்த வீதிகளைத் திருத்தம் செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் அந்த நிறுவனங்களால் மூலதமாக்கப்பட வேண்டிய | 100,000 கிலோ மீற்றர் செயற்திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிதல்லாத (Non-RDA) வீதிகளுக்காக 2022-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு செலவு செய்யப்பட்ட பணம் (அனைத்து Mob Advance) களை அறவீடு செய்ததன் | உள்ளுராட்சி நிறுவன எல்லைக்குரிய வீதிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை உரிய உள்ளுராட்சி நிறுவனங்களால் கணக்கீடு செய்யக்கூடிய வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அவ்வாறு மூலதனமாக்கப்படாது ஒரு செலவாகப் பதிவழித்தலானது கணக்காய்வில் சச்சரவுத் தன்மையான ஒரு விடயமாகும். மீளாய்வாண்டின் போது அவ்வாறு அதிகார சபைக்கு உரியதல்லாத (Non-RDA) வீதிக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 9,218 மில்லியன் தொகை செலவாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | பின்னர்) மூலதமாக்கப்படாத அபிவிருத்திச் செலவுகளின் கீழ் பதிவழித்தல் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக 2022 ஆம் ஆண்டின் போது 225 Non RDA வீதிகள் தொடர்பாக ரூபா 9,706.84 மில்லியன் பெறுமதி செலவாக பதிவழிக்கப்பட்டது. | தேவையான தகவல்களை வழங்கும் நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | பலவீனமான பாலங்களை புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறை வேலையின் பெறுமதி ரூபா 692.48 மில்லியனாகும். அதனுள் உள்ளடக்கப்பட்ட ரூபா 50.29 மில்லியனான ஊவா மாகாணத்திற்குரிய 13/6 ஆம் இலக்க தெமோதர- ஸ்பிரீன் வெலி பாலத்தை புனரமைப்புச் செய்யும் ஒப்பந்தம் 2019 யூன் 05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 மார்ச் 31 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்டபந்தக்காரருக்கு வேலைகளை ஆரம்பிப்பதற்கான முற்பணங்கள் செலுத்துதல் 2020 மே 29 மற்றும் 2020 செப்தெம்பர் 07 ஆந் திகதி வரை தாமதித்ததன் காரணமாக ஒப்பந்தக்காரரினால் உரிய செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதன் பௌதீக செயல்முன்னேற்றம் 90 சதவீதம் ஆகக் காணப்பட்டது. | தெமோதர ஸ்பிரீன்வெலி - பாலத்தின் ஒப்பந்தம் 2022 யூன் 13 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் பௌதீக செயல்முன்னேற்றம் 90 சதவீதமாக இருந்தும் பிரதம பொறியிலாளரினால் அதன் மிகுதி வேலைகளை உத்தரவாத காலத்திற்குள் ஒப்பந்தக்காரரினால் முடிவுறுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டு உப வேலைப் பூர்த்தியாக்கல் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. மிகுதி வேலைகள் தற்பொழுது முடிவுறுத்தப்பட்டிருந்தும் முழுமையான வேலைப் பூர்த்தியாக்கல் சான்றிதழ் இதுவரை வழங்கப்படவில்லை. | ஒப்பந்த வேலைகள் துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டியதுடன் தாமதமான செயற்திட்டங்கள் சம்பந்தமாக ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100,000 கிலோ மீற்றர் நீளமான வீதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2020-2022 காலத்திற்குள் அதிகார சபைக்கு உரியதல்லாத வீதிகளை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயமான நடைமுறை வேலையின் (WIP- Non RDA) கீழ் காட்டப்படுகின்ற பெறுமதி ரூபா 125,586.76 ஆகும். எனினும் இந்த நடைமுறை வேலை தொடர்பாக ஒப்பந்தக்காரரின் பெயர், ஒப்பந்த காலம், பெறுமதி, மற்றும் ஒப்பந்த காலத்தை நீடித்தல் ஆகிய தகவல்களை உள்ளடக்கிய ஒப்பந்த பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒன்பது மாகாணங்களிலுதம் இத்தரவுகள் பாரிய அளவில் உள்ளதனால் கணக்காய்வில் குறிப்பிட்ட தகவல்களை ஒரு ஒரு அறிக்கையாக கோவை செய்வதற்காக தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்கு குறிப்பிடத்தக்க அளவு காலம் எடுக்கும். | உரிய தகவல்களை மென் பிரதியின் மூலமேனும் பேணப்பட வேண்டியதுடன் கேட்க்கப்படும் போது கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 100,000 கிலோ மீற்றர் வீதிகள் செயற்திட்டத்தினைத் தவிர்த்து அதிகார சபை அமுல்ப்படுத்திய ஒப்பந்தங்கள் தொடர்பாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிடித்துவைத்த பணம் ரூபா 1,089.73 மில்லியனாக இருந்ததுடன் அந்த மீதியினுள் 03 ஆண்டுகளை மிகைத்த பெறுமதி ரூபா 503.66 மில்லியனாகும். ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்த நடவடிக்கைகளை உரிய காலத்தில் முடிவுறத்தாமை மற்றும் குறைபாடுகளை சரிசெய்யாமையின் காரணமாக பிடித்துவைத்த பணத்தை உரிய காலத்தில் விடுவிப்பதற்கு முடியாதிருந்தது. | பல காரணங்களின் அடிப்படையில் ஒப்பந்த நடவடிக்கைகள் உரிய காலத்தில் முடிவுறுத்தப்படாமை, முடிவுறுத்தப்பட்டிருந்தும் பிடித்துவைத்த பணத்தை வேண்டிக்கொள்ளாதிருந்தமை முதலிய காரணங்கள் இவ்வாறு பணம் விடுவிக்கப்படாமைக்கு தாக்கமளித்திருந்தது. | ஒப்பந்த வேலைகள் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் பூர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டியதுடன் பின்னர் பிடித்துவைத்த பணம் விடுவிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பிடித்துவைத்தல் பணத்தில் ரூபா 175.60 மில்லியன் ஒப்பந்தகாரரினால் வேண்டிக்கொள்ளப்படாததனால் படித்துவைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் குறைபாட்டு உத்தரவாத காலத்தினை மிகைத்துள்ள மற்றும் வேலைகள் முடிவுறுத்தப்படாது தெயடகிருல செயற்திட்டத்தின் கீழ் பிடித்துவைத்த பணம் ரூபா 22.88 மில்லியனில் ரூபா 12.42 மில்லியன் பணத்தை மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பதிவழிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் தென் மாகாண பிராந்திய அலுவலகம் மேற்கொண்ட 45 ஒப்பந்த செயற்திட்டங்களின் குறைபாட்டு உத்தரவாத காலம் 2017-2021 ஆண்டுகளின் போது முடிவடைந்திருந்தும் வேலைகள் முடிவுறுத்தப்பட்ட சான்றிதழ் வழங்கப்படாததனால் செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் ரூபா 5.72 மில்லியனாகக் காணப்பட்டதுடன் 08 ஒப்பந்தங்கள் தொடர்பான ரூபா 8.51 மில்லியன் பிடித்துவைத்தல் பணத்தை செலுத்துவதற்கு நிதி இல்லாததன் அடிப்படையில் தீர்த்துவைக்கப்படவில்லை. | ரூபா 12.42 மில்லியன் பணத்தை பதிவழிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டதற்கு காணரமாகவிருந்த விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | பிடித்து வைத்தல் பணம் உரிய காலத்தில் விடுவிக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதி வரை ஒப்பந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக சேவை நாடுனர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தின் வைப்பு மீதி (Client Deposit) ரூபா 2,959.35 மில்லியனாகும். அதில் 05 ஆண்டுகளை மிகைத்திருந்த போதிலும் | 05 ஆண்டுகளை மிகைத்த மீதிகள் காணப்படுவதானது கண்டி கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்திற்கும் மாத்தளை நீர் செயற்திட்டத்திற்குமுரிய | ஒப்பந்த நடவடிக்கைகளை துரிதமாக முடிவுறுத்துவதற்கும் மிகுதியான சேவை நாடுனர் வைப்புக்களை |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றப்படாத ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 150 ஆக இருந்ததுடன் அவை தொடர்பான மீதி ரூபா 614.94 மில்லியனாகும். மேலும் 3 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட நிறைவேற்றப்படாத ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 449 ஆக இருந்ததுடன் அவை தொடர்பான மீதி ரூபா 1,015.75 மில்லியனாகும். மாகாண அலுவலகங்களுடனான ஒப்பந்தம் தொடர்புபட்ட தகவல்களை பரிமாற்றம் செய்தல் தாமதமடைதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளில் காணப்பட்ட பலவீனமும் இப்பண வைப்பினை தீர்த்துவைக்காமைக்கு காரணமாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த சேவை நாடுனர் வைப்பு மீதியினுள் உள்ளடக்கப்பட்ட இலங்கை மஹவெலி அதிகார சபையினால் மிகையாகச் செலுத்தப்பட்ட ரூபா 42.96 மில்லியன் 2022 நவம்பர் 16 ஆந் திகதி வேண்டிக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையினால் அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்தி கணக்காய்வுத் திகதியான 2023 யூன் 10 ஆந் திகதி வரை அப்பெறுமதி தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக்களிலாகும். இச்செயற்திட்டங்கள் இன்றுவரை வேலைகளை முடிவுறுத்தியிருக்காததனால் அந்த வைப்புக்கள் இன்று வரை பிடித்து வைக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் தற்பொழுது முடிவுறுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களில் ஏதாவது மீதி காணப்படுமாயின் அவற்றினை வருமானத்திற்கு செலவு வைக்குமாறும் பூர்த்தி செய்யுமாறும் அனைத்து மாகாணங்களுக்கும் பொறுப்பான பணிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஆலோசனை கள் வழங்கப்பட்டுள்ளன. | தீர்த்துவைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | அதிகார சபையினால் 10 நிர்மாண செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களின் பெறுமதி ரூபா 45,811.79 மில்லியனாக இருந்ததுடன் அப்பெறுமதியினுள் 05 செயற்திட்டங்கள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த ரூபா 15.53 மில்லியன் முற்பணம் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய மீதிகள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் கட்டம் I மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் கட்டம் III மற்றும் ருவன்புர அதிவேக வீதி செயற்திட்டம் என்பவற்றிற்காக மொத்தமாக ரூபா 39,976.2 மில்லியன் தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய 03 செயற்திட்டங்களின் வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க வேலைகளை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள ரூபா | மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் கட்டம் I, மத்திய அதிவேக வீதி செயற்திட்டம் கட்டம் III ஆகிய செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மிகுதி விலைப்பட்டியல்களை தீர்த்துவைக்கும் போது அது தொடர்பான முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படும். தற்பொழுது நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | துரிதமாக ஒப்பந்த வேலைகளை முடிவுறுத்துவதற்கும் முற்பணங்களை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 45,811.79 மில்லியன் முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஏ) | இலங்கை அரசாங்கம் கொரிய ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் 2017 ஏப்ரல் 06 ஆந் திகதி மேற்கொண்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் ஐக்கிய குடியரசு டொலர் 199.27 மில்லியன் கடன் தொகை கண்டி சுரங்கப் பாதையை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக வழங்குவதற்கும் அக்கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 05 ஆண்டுள் காலத்திற்குள் வேவைலயை முடிவுறுத்துவதற்கும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. உரிய கடன் தொகையை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக எழுத்துமூல உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினைப் (EIA) பெற்று அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் மீள் குடியமர்த்துதல் செயல்நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 95.75 மில்லியன் பெறுமதியான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரிக்கும் ஒப்பந்தம் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு 2021 மார்ச் 25 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 59.86 மில்லியன் மீளாய்வாண்டு இறுதியளவில் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் உரிய அறிக்கையினைத் தயாரிக்கும் நடவடிக்கை 2023 மே 31 ஆந் திகதி வரை முடிவடைந்திருக்கவில்லை. மேலும் மீள்குடியமர்த்தும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிக்கும் ஒப்பந்தம் ஒரு தனியார் கம்பனிக்கு 2022 ஒக்தோபர் 04 ஆந் திகதி ரூபா 8.47 மில்லியனுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் அச்செயற்பாட்டினை 04 மாதங்களுக்குள் முடிவுறுத்த வேண்டிய போதிலும் 2023 மே 30 ஆந் திகதி வரை உரிய செயற்பாடு முடிவடைந்திருக்கவில்லை. இதன் காரணமாக செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணங்களுக்காக ஒப்பந்தக்காரர்களை தெரிவுசெய்யும் நடவடிக்கைகளை 2023 ஆகஸ்ட் 31 ஆந் தகிதி வரை ஆரம்பிக்க முடியாது காணப்பட்டது. | செயற்திட்ட சுற்றாடல் ஆய்வு அறிக்கைகளைத் தயாரிக்கும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன் மீள் குடியமர்த்தும் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தல் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் சுரங்கப் பாதையை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட இடங்களில் குடியிருப்பவர்களின் அதிகளவான எதிர்ப்பு காணப்படல், மற்றும் தேவையான தகவல்கள் அவர்களினால் வழங்கப்படாமையால் தாமதமடைந்துள்ளது. | சுற்றாடல் ஆய்வு அறிக்கையையும் மீள் குடியமர்த்தல் நடவடிக்கைத் திட்டத்தினையும் தயாரிக்கும் நடவடிக்கையும் துரிதமாக முடிவுறுத்தி திட்டமிட்டவாறு செயற்திட்டத்தினை ஆரம்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | சுற்றுலா விடுதியினை நிர்மாணிப்பதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு அதிகார சபையினால் 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 60 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அப்பணத்தில் ரூபா 44.18 மில்லியன் தொகையான வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தும் மிகுதி ரூபா 15.82 மில்லியன் தொகைக்குரிய வேலைகளை மேற்கொள்வதற்கு அல்லது உரிய முற்பணத்தை மீள அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதிப் பணம் சம்பந்தமாக தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டு அதனைத் தீர்த்துவைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | உரிய செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு அல்லது மிகுதிப் பணத்தை மீள அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 100,000 மாற்று வீதிகளைப் புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டிருந்த பொறியியலாளரின் மிகை மதிப்பீட்டினைத் திருத்தம் செய்தல் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு வரிசை அமைச்சின் செயலாளரினால் 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதி அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. மேலும் பல சந்தர்ப்பங்களில் மிகை மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்த மதிப்பீட்டின் பெறுமதியை திருத்தம் செய்து இறுதி விலைப்பட்டியல் கணக்காய்விற்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றது என அமைச்சு செயலாளர் தெரியப்படுத்தியிருந்தார். எவ்வாறாயினும் பின்னர் 2021 ஏப்ரல் 27 ஆந் திகதிக்கு முன்னர் கையொப்பமிட்ட ஒப்பந்தத்திற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியும் அதன் பின்னர் கையொப்பமிட்ட ஒப்பந்தத்திற்காக உள்ளபடியாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கும் அமைச்சு செயலாளரின் MOR&H/SEC/GEN/2022/71 ஆம் இலக்க 2022 ஒக்தோபர் 03 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அதிகார சபையினால் மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 115,435 மில்லியன் செலுத்துதலானது கணக்காய்வில் சச்சரவுத் தன்மையான ஒரு விடயமாகும். | இது சம்பந்தமாக 2021-03-29 ஆந் திகதி பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளரின் தலைமையில் அமைச்சு உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்க கணக்காய்வு உத்தியோகத்தர்களின் பங்குபற்றலில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது உருவாகிய இணக்கப்பாட்டின் பிரகாரம் மதிப்பீட்டினை மீண்டும் மீளாய்வு (Revised) செய்யுமாறு உரிய மாகாணத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் ஒப்பந்த கம்பனி இது தொடர்பாக அவர்களின் எதிர்ப்பினை எழுத்துமூலம் வெளிப்படுத்தி தெரிவித்ததானது பொறியியலாளர் மதிப்பீட்டிற்காக போட்டிக் கழிவுப் பணம் வழங்கி செயற்திட்டம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதனால் அந்த உடன்படிக்கை செய்யப்பட்ட பணத்தில் திருத்தங்களுக்காக இணங்கவில்லை என்பதாகும். பொறியியலாளர் மதிப்பீட்டின் அடிப்படையில் கழிவுப் பணமாக ஒப்பந்தம் வழங்கப்பட்டதனால் மீகை மதிப்பீடு செய்யப்படல் அல்லது அதன் மூலம் | கலந்துரையாடலின் போது இணங்கி கொண்டவாறு மிகை மதிப்பீட்டினை சரிசெய்வதற்கு மற்றும் மிகை மதிப்பீட்டினை தயாரிப்பதற்கு பங்களிப்புச் செய்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருக்கவில்லை. | |
| (ஓ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை உள்நாட்டு நிதியின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட தேசிய, பிராந்திய மற்றும் கிராமிய ரீதியாக 100,000 கிலோ மீற்றர் மாற்று வீதிகளை புனரமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட ஒட்டுமொத்த வீதிகளின் தூரம் 17,847 கிலோ மீற்றர்களாக இருந்ததுடன் அவற்றின் வேலை பூர்த்திசெய்யப்பட்ட தூரத்தின் அளவு 6,298 கிலோ மீற்றர்களாகும். இன்னும் வேலை செய்யப்பட்டுகொண்டிருக்கும் அளவு 11,549 கிலோ மீற்றர்களாகும். இச்செயற்பாட்டிற்காக ரூபா 142,821 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் செலுத்த வேண்டியுள்ள கையிலுள்ள விலைப்பட்டியல்களின் பெறுமதி ரூபா 16,810 மில்லியனாகும். இச்செலவுகளை தீர்த்துவைப்பதற்காக உள்நாட்டு வங்கியிடமிருந்து ரூபா 43,205 மில்லியனும் அமைச்சு செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 68,263 மில்லியனும் திறைசேரி உண்டியல்களை வழங்குவதன் மூலம் 2022 திசெம்பர் 27 ஆந் திகதி ரூபா 31,353 மில்லியனும் மற்றும் 2023 மார்ச் 13 ஆந் திகதி ரூபா 4,587 மில்லியனும் ஆக இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 35,940 மில்லியனும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இச் செயற்பாடுகளுக்காக ரூபா 142,821 மில்லியன் 2022-12-31 ஆந் திகதி வரை செலுத்தப்பட்டுள்ளதுடன் செலுத்த வேண்டியுள்ள கையில் உள்ள விலைப்பட்டியல்களின் (Bills in hand) பெறுமதி ரூபா 16,810 மில்லியனாகும். இச்செலவுகளைத் தீர்த்துவைப்பதற்காக உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ரூபா 43,205 மில்லியனும் அமைச்சு செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 68,263 மில்லியனும் திறைசேரி உண்டியல்களை வழங்குவதன் மூலம் இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 31,353 மில்லியனும் மற்றும் ரூபா 4,587 மில்லியனும் வழங்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் நிதியை வினைத்திறனாக மற்றும் சிறப்பாக திட்டமிட்ட செயற்திட்டங்களில் ஈடுபடுத்துவதன் மூலம் வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஔ) | குருனாகல், பொலன்னறுவை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிகள் செயற்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட 42 வீதி நிர்மாண செயற்திட்டங்களின் 119 வீதிகளுக்குரிய மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது பிரதான வேலை விடயங்களின் விலை விகிதங்கள் மிகையாக கணிக்கப்படல், மூலப் பொருட்களை எடுத்துச் செல்லும் தூரம் உள்ளபடியான தூரத்தினைவிட அதிகரித்தல், செயற்திட்ட கண்காணிப்பு கிரயம் மற்றும் நிருவாக கிரயம் உயர்ந்த விகிதத்தில் காட்டப்படல், மூலப் பொருட்கள் வீணாகுவதற்காக நியாயமற்ற பெறுமதி உள்ளடக்கப்படுவதன் காரணமாக ஒப்பந்த கிரயம் ரூபா 220.91 மில்லியனால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு பந்தியுடன் இணங்கவில்லை. இந்த வீதி ஒப்பந்த பெக்கேஜானது பல வீதிகளை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் மூலப்பொருளை எடுத்துச்செல்லும் தூரத்தினை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது ஒரு வீதிக்காக அல்லாது அந்த ஒப்பந்தத்தின் கீழுள்ள அனைத்து வீதிகளையும் கவனத்தில் கொண்டாகும். மூலப் பொருட்களை மூடிவைத்தல் அல்லது களஞ்சியப்படுத்துவதற்காக பொருத்தமான பாதுகாப்பான | மதிப்பீடு மிகைக் கணிப்பீடு செய்வதனை சரிசெய்வதற்கு மற்றும் உள்ளபடியான வேலைப் பெறுமதியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இடத்தை தேடிப்பார்க்கும் போது வேலைத் தளத்தினைவிட தாரத்தில் கிடைத்துள்ளதனால் மீண்டும் எடுத்துச் செல்லும் போது வீணாகுதல் ஏற்பட்டுள்ளது. ஏனைய கிராமிய வீதி செயற்திட்டங்களில் பின்பற்றப்படுகின்ற பொருள் சேதமடைதல் சம்பந்தமாக காணப்படும் நடைமுறையை கவனத்தில் கொண்டு குறைந்த பெறுமதியுடன் பொருள் சேதமடைவதற்காக 10 சதவீதம் அளவில் மதிப்பீடு தயாரிக்கப்படும் சந்தர்ப்பம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | |
| (ஔ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 21 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் உள்ள தெருக்கள் மற்றும் வீதிகள் தொடர்பான பொது அதிகாரம் பிரதேச சபைக்குரியது என காட்டப்பட்டிருந்தும் அந்த ஏற்பாடுகளை கவனத்தில் கொள்ளாது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த வீதிகளின் ஒரு லட்சம் கிலோ மீற்றர்களை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக உரிய பிரதேச சபையிடமிருந்து எழுத்துமூல அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை என குருனாகல் மாவட்டத்தில் இந்த வீதி நிர்மாணிப்பு தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. பூரணப்படுத்தப்பட்ட, இடைநடுவில் நிறுத்தப்பட்ட மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட எனினும் வேலை ஆரம்பிக்கப்படாத வீதிகளை மீள வழங்குவதற்கு அதிகார சபையினால் பிரதேச சபைக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் அந்த வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக உரிய பிரதேச சபையினால் அந்த வீதிகளை பொறுப்பேற்றல் நிராகரிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வுப் பந்திக்கான திருத்தங்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | அனைத்து உள்ளூராட்சி வீதிகளையும் மீண்டும் உரிய பிரதேச சபைக்கு முறைப்படியாக ஒப்படைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒரு இலட்சம் வீதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தில் 6,426 கிலோ மீற்றர் வீதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 193,518 மில்லியன் தொகையான 2481 வேலைக் கட்டளைகள் (Work order) மகனெகும நிர்மாணித்தல், இயந்திரங்கள் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 131,650 மில்லியன் கிரயமான 4,732.8 கிலோமீற்றர் வீதிகளின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு மத்தியில் 306.97 கிலோமீற்றர் வீதி தொடர்பான பெறுமதி ரூபா 5,920 மில்லியன் தொகையான 71 வேலைக் கட்டளைகளின் ஒப்பந்த நடவடிக்கைகள் மாத்திரம் நேரடியாக மேற்கொள்வதற்கு கம்பனி பொறுப்பேற்றிருந்தது. அது மொத்த வேலைக் கட்டளைகளின் பெறுமதியில் 03 சதவீதம் அளவான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் மிகுதி வேலைகளான 97 சதவீதம் தொடர்பான 4,425.87 கிலோ மீற்றர் வீதிகளுக்கான கிரயம் ரூபா 125,730 மில்லியன் தொகையான 1,753 வேலைக்கட்டளைகளின் ஒப்பந்த நடவடிக்கையானது கம்பனியின் சேவை வழங்குனர்களாக இனங்காணப்பட்ட உப ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் இவ்வாறு உப ஒப்பந்தம் வழங்குதல் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபைப் பத்திரம் இலக்கம் 2008/1109 இற்கு முரணானதுடன் 2020 மே 07 ஆந் திகதிய அமைப/20/0731/221/005-1 ஆம் இலக்க அமைச்சரவை திர்மானத்தின் பிரகாரம் ஒரு அரசாங்க கம்பனிக்கு ஒப்பந்தம் வழங்கும் குறிக்கோளும் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் உப ஒப்பந்தக்காரரின் இலாபமாக அரசாங்கத்தின் பணம் ரூபா 20,955 தொகை தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதிவரை முழு வேலைக்கட்டளைகளில் ரூபா 32,736 மில்லியன் தொகையான 351 வேலைக்கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 29,130 மில்லியன் தொகைக்குரிய 306 | 100,000 கிலோமீற்றர் விதிகளை அபிவிருத்திசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மகனெகும நிறுவனத்திற்கான ஒப்பந்தங்கள் வேலைக்கட்டளைகளாக (Work Orders) வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க மகனெகும நிறுவனத்திற்கு 7,377.37 கிலோ மீற்றர்களுக்கான ரூபா 190,800 பெறுமதியான 2,416 வேலைக் கட்டளைகள் மாகாணத்தின் மாகாணத்திற்குப் பொறுப்பான பணிப்பாளரினால் வழங்கப்பட்டது. மேலும் மகனெகும நிறுவனத்தின் மூலம் இச்செயற்திட்டத்தை உப ஒப்பந்தம் வழங்குவது சம்பந்தமாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு தெரியப்படுத்தப்படவில்லை. | ஒப்படைக்கப்பட்ட வேலைக்கட்டளைகளை உரிய காலத்தில் முடிவுறுத்துவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரமின்றி உப ஒப்பந்தம் வழங்கிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேலைக்கட்டளைகளின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (கா) | மாத்தறை மாவட்டத்தில் ஒப்பந்தக்காரர்களுக்கு வேலை முற்பணங்கள் வழங்கும் போது ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 590.28 மில்லியன் வேலை முற்பணங்களின் 26 பிணைகளின் செல்லுபடியாகும் காலம் மீளாய்வாண்டின் இறுதியளவில் காலாவதியாகியிருந்தது. எனினும் வேலைகள் முடிவு செய்யப்படாத மற்றும் வேலைகளை இடைநடுவில் நிறுத்திய வீதிகளுக்குரிய வேலை முற்பணங்களின் பிணைகளின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கு அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2023 மார்ச் 15 ஆந் திகதி வரை ஒப்பந்தக்கார்களுக்கு செலுத்திய வேலைக்கு முன்னைய முற்பணங்கள் ரூபா 398.92 மில்லியனை மீள அறவீடு செய்வதற்கு முடியாது காணப்பட்டது. | இச்செயற்திட்டங்களின் வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களின் போது குறிப்பிடத்தக்க அளவு விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததனால் முழுமையான முற்பணங்களையும் அறவீடு செய்வதற்கு முடியாதருந்தது. அறவீடு செய்வதற்கு மிகுதியாக இருந்த பணம் ரூபா 389.26 மில்லியனாகும். | வெலை முற்பணங்களின் பிணை காலத்தினை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டவாறு கோகலை மாவட்டத்தில் மகனெகும நிர்மாணக் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்ட ரூபா 1,735.62 மில்லியன் கிரயமான 74 நிர்மாண ஒப்பந்தங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் புத்தளம் மாவட்டத்தில் 124 வீதிகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் புத்தளம் மாவட்டத்தில் 20 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 5,291 மில்லியனும் பொலன்னறுவை மாவட்டத்தில் 10 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 377.26 மில்லியனும் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாணங்களும் புத்தளம் மாவட்டத்தில் 208 வீதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளும் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக வீதிகளைப் பயன்படுத்தும் பொதுமக்கள் சிக்கல்களுக்கு உள்ளாகியிருந்ததுடன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக | நாடு முழுவதும் தீவிரமாக பரவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை, மூலப் பொருட்களை வழங்குவதிலுள்ள சிக்கல்கள், எரிபொருள் தட்டுப்பாடு, பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிக அளவில் உயர்வடைந்திருத்தல் ஒப்பந்த கம்பனிகளுக்கு விலைப்பட்டியல்களை கொடுப்பனவு செய்வதிலுள்ள தாமதம் ஆகிய விடயங்களினால் இதில் குறிப்பிட்ட வீதிகளை பூர்த்திசெய்வதற்கு முடியாதுள்ளது. மேலும் நிதி அமைச்சின் 03/2022 ஆம் இலக்க 2022-04-26 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு இணங்க அரசாங்க | ஒப்பந்தக்காரரின் இயலளவினை கவனித்துப் பார்த்ததன் பின்னர் ஒப்பந்தங்கள் வழங்கப்பட வேண்டியதுடன் வேலைகள் முடிவுறுத்தப்படாத மற்றும் ஆரம்பிக்கப்படாத ஒப்பந்தங்கள் சம்பந்தமாக ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேணடும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டு வரப்பட்டுள்ள மூலப்பொருட்களும் பாதுகாப்பின்றி காணப்படுகின்றன. | செலவுகளை கட்டுப்படுவதற்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் இந்த வீதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. | |
| (கீ) | மாத்தறை மாவட்டத்தில் 02 ஒப்பந்த பெக்கேஜ்களின் கீழ் ABC பரப்பி அபிவிருத்தி செய்யப்பட்ட ரூபா 62.74 மில்லியன் பெறுமதியான 10 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் பரப்பிய ABC முழுமையாக சுழன்று நீங்கியிருந்ததனால் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் காணப்பட்ட நிலைமை உருவாகியிருந்தது எனவும் வீதிகளில் போக்குவரத்துச் செய்வதற்கு பயன்படுத்த முடியாத நிலைமை உருவாகியுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட மொத்தமாக ரூபா 17.15 மில்லியன் தொகையும் விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | ABC ஈடுபடுத்திய வீதிகளின் மேற்பரப்பின் மூலம் வாகனங்கள் ஓடுதல் மற்றும் மழையுடனான காலநிலைக்கு உள்ளாகுவதன் காரணமாக ABC மேற்பரப்பிற்கு சேதம் ஏற்பட்டு போக்குவரத்து செய்வதற்கு சிக்கலான நிலைமை உருவாகியுள்ளது. இந்த வீதிக்காக நியம தரத்துடன் மேற்கொள்ளப்பட்ட தொடக்க நிர்மாண நடவடிக்கைகளுக்காகவே கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | நிர்மாணங்களை கண்காணிப்புச் செய்யும் நடவடிக்கைகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உரிய வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவேக வீதிகளின் செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பதவியணியினர்களுக்காக நிருவாகப் பிரிவினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் எண்ணிக்கை 81 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் அப்பிரிவுகளில் சேவையாற்றிய உள்ளபடியான பதவியயினர்களின் எண்ணிக்கை 136 ஆகும். அதற்கிணங்க அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கையை மிகைத்து 55 ஊழியர்கள் உரிய பிரிவுகளில் சேவையாற்றுகின்றார்கள் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் அதிவேக வீதிகளின் செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் காசாளர்கள் காவலாளர்களாக நியமனங்களைப் பெற்ற எனினும் முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகளில் | அதிவேக வீதிகளின் செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவினைச் சேர்ந்த பண்டாரகம பிரதான அலுவலகத்தினைப் போல இடமாறல் அலுவலகங்களின் சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நபர்களில் நிருவாகப் பிரிவினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்ணிக்கையை மிகைத்து சேவையில் ஈடுபட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளனர் என்பதுடன் இணங்கிகொள்ளப்படுகின்றது. முகாமைத்துவ உதவியாளர்கள் அல்லாத பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் பதவிகளில் கடமைகளை | பதவியணியினர்கள் அங்கீகரித்த எல்லைக்கு உட்பட்டிருக்க வேண்டியதுடன் மிகை ஊழியர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தற்காலிகமாக சேவையாற்றுகின்ற 24 ஊழியர்கள் உரிய நிரந்தர பதவிகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றுகின்றார்கள் என்பதுடனும் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட உள்ளககச் சுற்றறிக்கையின் மூலம் நேரடி தொழிலாளர் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களை அலுவலக நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தும் அதற்கு முரணாக மாகாண அலுவலகத்திற்காக நிரந்தர மற்றும் அமைய அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட நேரடி தொழிலாலர்களுள் முறையே 106 நபர்கள் மற்றும் 181 நபர்கள் வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படாது அலுவலக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் . | நேரடி தொழிலார் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள ஊழியர்களை அலுவலக நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாதிருக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தும் நிரந்தர மற்றும் அமையத் தொழிலாளர்களில் ஆகக் குறைந்த நபர்கள் அலுவலக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்பதுடன் இணங்கிக் கொள்கின்றேன். | உள்ளக சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிககை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாடச்சியும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பதவியனியினர் 10801 ஆக இருந்ததுடன அந்த பதவியணியினருக்காக 2022 ஆம் ஆண்டின் போது சம்பளம் மற்றும் வேதனத்திற்காக ரூபா 8,315.03 மில்லியனும், நிருவாகச் செலவுகளுக்காக ரூபா 842.4 மில்லியனும் உள்நாட்டு வங்கி கடன் வட்டி மற்றும் கடன் தவணைப்பணத்திற்காக ரூபா 52,621.53 மில்லியனும் ஆக ஒட்டு மொத்த மீண்டுவரும் செலவாக ரூபா 61,778.97 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான வருடாந்த சராசரி சம்பளம் மற்றும் வேதனச் செலவுகளில் ரூபா 0.77 மில்லியனாக இருந்தது. மேலும் 2022 ஆம் ஆண்டில் மூலதனச் செலவுகளை மேற்கொள்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 140,294.27 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டின் அளவு ரூபா 96,008.46 மில்லியனாகும். அத்தொகையில் ரூபா 21,231.7 மில்லியன் 2021 ஆம் ஆண்டின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கடப்பாடுகளை தீர்த்துவைப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது செலவு செய்யப்பட்டுள்ள மூலதனச் செலவு ரூபா 98,225.92 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் தீர்த்துவைக்கப்படாத செலவுகளின் பெறுமதி ரூபா 23,449.15 மில்லியனாகும். ஒட்டுமொத்த செலவுகளான ரூபா 160,004.89 மில்லியனில் 39 சதவீதம் அளவானவை மீண்டுவரும் செலவுகளுக்காக செலவு செய்யவேண்டியிருந்ததன் காரணமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் குறிக்கோள்களையும் கடமைகளையும் நிறைவேற்றுதல் குறைந்த மட்டத்தில் | அடுத்துவரும் காலங்களில் கூட்டிணைந்த திட்டத்தினையம் செயல்நடவடிக்கைத் திட்டத்தினையும் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | தற்போதைய பொருளாதார மற்றும் சுற்றாடல் காரணிகளை கவனத்தில் கொண்டு எதிர்கால கூட்டிணைந்த திட்டத்தினை தயாரித்தல் வேண்டும். |

காணப்பட்டதுடன் இது தொடர்பாக நீண்ட ஆய்வினை மேற்கொண்டு அவற்றினை நிறைவேற்றுவதற்குரிய வினைத்திறனான கூட்டிணைந்த திட்டத்தினையும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினையும் தயாரிப்பது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

**4.2 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அதிகார சபையினால் 2022 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டதில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக்கூடியதான வேலைத்திட்டம் வெளிப்படுத்தப்படாததுடன் அதிகார சபையினால் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் என்ன என்பதனையும் அவை தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிகள் (SDG Indicators) மற்றும் ஆண்டின் போது அக்குறிகாட்டிகளின் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் போன்ற வரையறைகள் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே 2030 ஆம் ஆண்டு வரை நிறைவேற்றவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிலைபேறான குறிக்கோள்கள் உறுதியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகார சபை தொடர்பாக இனங்காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் கீழ் 2030 ஆம் ஆண்டு வரை எதிர்பார்த்த குறிக்கோள்களை இனங்கண்டு அதற்கிணங்க திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் உரிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்காட்டிகளையும் அவற்றின் எதிர்பார்த்த வருடாந்த செயலாற்றலினையும் உள்ளடக்கும் வகையில் செயல்நடவடிக்கைக் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தெளிவுபடுத்தப்பட வேண்டியதுடன் 2030 ஆம் ஆண்டு வரை நிறைறேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிலைபேறான குறிக்கோள்கள் இனங்காணப்படுதல் வேண்டும். |